**பெரம்பலூர் மாவட்டம்**

**கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் ஒருங்கிணைப்புக்குழு தலைவர் டாக்டர் தரேஸ் அஹமது இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் நோய்தடுப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.**

பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் ஒருங்கிணைப்புக்குழு தலைவர் டாக்டர் தரேஸ் அஹமது இ.ஆ.ப., அவர்கள் கொரோனா வைரஸ் நோய்தடுப்பு பணிகள் குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை இன்று (06.06.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள மகப்பேறு சிகிச்சை பிரிவில் அளிக்கப்பட்டு வரும் சிகிச்சைகள், மகப்பேறு திட்டத்தில் மகளிர்களை தங்க வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் பகுதி, குடும்ப கட்டுப்பாட்டு பகுதி, ஒரு நாளின் குழந்தைகள் பிறப்பு விகிதம், அதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள், எம்.ஆர்.ஐ ஸ்கேன் பகுதி ஆகியவற்றை பார்வையிட்டு சிகிச்சை முறைகள் குறித்தும், சிகிச்சை பெறுபவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வசதிகள், சாப்பாடு மற்றும் அதன் தரம், சுவை, வழங்கப்படும் நேரம் குறித்தும் கேட்டறிந்தார். பின்னர் புதியதாக துவக்கப்பட்டுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவினை பார்வையிட்டு அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள படுக்கை வசதி, கழிப்பிட வசதி, அவசர சிகிச்சை பிரிவில் வழங்கப்பட்டு வரும் உயிர்காக்கும் மருத்துவ வசதிகள் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத்தொடர்ந்து, கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டு வரும் மருத்துவ வசதிகள், புதிதாக ஏற்படுத்தப்பட்டு வரும் ஆக்ஸிஜன் உற்பத்தி செய்யும் இயந்திர கொள்கலன், அதில் கூடுதலாக மேம்படுத்த வேண்டிய வழிமுறைகள் குறித்தும், மருத்துவமனையில் மருந்தக கிடங்கில் வைக்கப்பட்டுள்ள மருந்து பொருட்கள் இருப்பு மற்றும் அது விநியோகம் செய்யப்படும் விதம் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்விற்குபின் தெரிவிக்கையில், தமிழக அரசு கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்கும் பணியினை தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்கு தேவையான அனைத்து பணிகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஒருங்கிணைந்த கட்டளை கட்டுப்பாட்டு அறை (WAR ROOM) அகைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அரசு மருத்துவமனைகளுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்தி வருகிறது. இதுவரை கட்டளை கட்டுப்பாட்டு மையத்திற்கு (WAR ROOM) 60,000க்கும் மேற்பட்ட அழைப்புகள் பெறப்பட்டுள்ளது. இதில் 36,000க்கும் மேற்பட்ட அழைப்புகள் படுக்கை வசதிகள் குறித்தும், 1,300க்கும் மேற்பட்ட அழைப்புகள் தனியார் மருத்துவமனையிலிருந்து ஆக்ஸிஜன் சிலிண்டர் கோரியும் அழைப்புகள் பெறப்பட்டுள்ளது. இதில் கட்டளை கட்டுப்பாட்டு அறை (WAR ROOM) மூலம் 95% மேற்பட்ட அழைப்புகளுக்கான தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் சிறு குழந்தைகளுக்கு கொரோனா வைரஸ் பரவாமல் இருப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரசவித்த தாய்மார்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்திட வரைமுறை பெறப்பட்டுள்ளது. கர்ப்பிணி தாய்மார்களுக்கு அனுமதி கிடைத்தவுடன் தடுப்பூசிகள் செலுத்தப்படும். அரசு மருத்துவமனையில் தினந்தோறும் ஆக்ஸிஜன் 40 முதல் 60 மெட்ரிக் டன் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது 10 மடங்கு கூடுதலாக 500 முதல் 600 மெட்ரிக் டன் தேவை ஏற்பட்டது. இதன் காரணமாக பற்றாக்குறை ஏற்பட்டு வந்த நிலையில் தற்போது தமிழக அரசின் துரித நடவடிக்கையால் ஆக்ஸிஜன் பற்றாக்குறை சீர்படுத்தப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் இது போன்ற தேவையினை கருத்தில் கொண்டு ஆக்ஸிஜன் உற்பத்தி மையங்கள் கூடுதலாக ஏற்படுத்தி இருப்பு வைத்துக்கொள்வதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கருப்பு பூஞ்சை நோயினை கட்டுப்படுத்திடவும், அதற்கு சிகிச்சை அளித்திடவும் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

கொரோனா வைரஸ் நோய் தடுப்பூசி செலுத்திக் கொள்வதில் பொதுமக்கள் விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் தடுப்பூசி செலுத்தி கொள்வதில் ஒருவித தயக்கம் ஏற்பட்ட நிலை இருந்தது. தற்போது பொதுமக்கள் தாமாக முன்வந்து அதிக ஆர்வத்துடன் தடுப்பூசிகளை செலுத்திக் கொள்கின்றனர். கிராமப்புறங்களிலும் இதே ஆர்வம் தொடர்கிறது. பொதுமக்கள் கொரோனா வைரஸ் நோய்தொற்றினை தடுத்திட முகக்கவசம் அணிதல், அடிக்கடி கிருமிநாசினி கொண்டு கைகளை சுத்தம் செய்து கொள்ளுதல், சமூக இடைவெளியினை கடைபிடித்தல், அத்தியாவசிய தேவைகளின்றி வெளியில் வருவதை தவிர்த்தல் போன்றவைகளை கடைபிடிக்க வேண்டும் என தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக கூட்டரங்கில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் ஒருங்கிணைப்புக்குழு தலைவர் டாக்டர்.தரேஸ் அஹமது இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ,ப., அவர்கள் முன்னிலையில் அரசு அலுவலர்கள் மற்றும் தனியார் மருத்துவமனை நிர்வாகிகளுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கொரோனா வைரஸ் நோய் தொற்று நோய் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கும் பொதுமக்கள் முதலமைச்சர் காப்பீடு திட்டத்தின் மூலம் சிகிச்சைக்கான கட்டணத்தினை செலுத்துவதில் எவ்வித இடர்பாடுகளும் இல்லாமல் தொடர்ந்து கண்காணித்திட வேண்டும். கர்ப்பிணி தாய்மார்களுக்கு கொரோனா நோய் தொற்று காலத்தில் தொற்று ஏற்படா வண்ணம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும் குழந்தை பிறந்து ஒரு மாத காலத்திற்கு தாய் சேய் இருவரையும் தொடர்ந்து கண்காணித்திட வேண்டும். கிராமப்புறம் மற்றும் நோய்தொற்று கண்டறியப்பட்ட இடங்களில் வீடு வீடாக சென்று பரிசோதிக்கும் முகாமினை தொடர்ந்து நடத்திட வேண்டும். பொதுமக்கள் தடுப்பூசி செலுத்திக்கொள்ள தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் ஒருங்கிணைப்புக்குழு தலைவர் டாக்டர் தரேஸ் அஹமது இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.ராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் (தேசிய சுகாதார இயக்கம்) திருமதி அழகுராணி, இணை இயக்குநர் மருத்துவ பணிகள் மரு.திருமால், மருத்துவமனை மருத்துவ அலுவலர் திரு.என்.ராஜா, துணை இயக்குநர்(சுகாதார பணிகள்) மரு.கீதாராணி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**